சுற்றுநிருபம் - ~~67/2008~~ 03/2008

கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு
வட மாகாணம்
01.02.2008

வட மாகாணத்திலுள்ள சகல
கூட்டுறவு நிறுவனங்களின் தலைவர்களுக்கும்

2008 – பகிரங்க விடுமுறை

1972ம் ஆண்டின் 12ம் இலக்க கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்ட 169/8ம் இலக்க 1981.12.01ந் திகதிய கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு ஒழுங்கு விதியின் 67 வது பிரிவிற்கிணங்க கூட்டுறவு ஊழியர்களுக்குரியதான பொது விடுமுறை தினங்கள் என்பது கடை அலுவலகச் சிப்பந்திகள் சட்டத்தின் கீழ் கௌரவ தொழில் அமைச்சரினால் பிரகடனப்படுத்தப்பட்ட தினங்களேயாகும். இதற்கிணங்க 2008 ம் வருடத்திற்கு அங்கீகரிக்கப்பட்டுள்ள விடுமுறை நாட்கள் கீழ் குறிப்பிட்டவாறு இருக்க வேண்டுமென ஆணைக்குழு கட்டளைப்படி அறியத்தரப்படுகின்றது.

01. தைப்பொங்கல் தினம்
02. தேசிய தினம்
03. சிங்கள / தமிழ் புதுவருடத்திற்கு முன்தினம்
04. சிங்கள / தமிழ் புதுவருட தினம்
05. மே தினம்
06. வெசாக் பூரணை தினத்திற்கு மறுதினம்
07. மீலாத்துன் நபி (நபிகள் நாயகம் அவர்களின் பிறந்த தினம்) தினம்
08. நத்தார் தினம்

இவற்றுடன் மேற்குறிப்பிட்ட தினங்களுக்கு மேலதிகமாக கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரால் கூட்டுறவாளர்களின் தினமாக பிரகடனப்படுத்தப்பட்ட திகதியும், தொடர்ந்தும் விடுமுறையாக வழங்கப்பட வேண்டும்.

மேற்குறிப்பிட்ட விடுமுறை நாட்கள் ஏதாவது சங்கத்தின் வாராந்தம் அளிக்கப்படும் விடுமுறை நாட்களுக்குள் உட்படுத்தப்பட்டிருக்கும் பட்சத்தில் அதற்கு பதிலாக பதில் விடுமுறையோ அல்லது சம்பளமாகவோ ஊழியரதும், சங்க நிர்வாகத்தினதும் இணக்கத்துடன் சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு அடுத்தபடியாக வருகின்ற 30 நாட்களுக்குள் வழங்கப்பட வேண்டும்.

2008.01.31ந் திகதிய ஆணைக்குழு கட்டளைப்படி.

பொ.வாகீசன்
செயலாளர்
கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு
வட மாகாணம்

பிரதி :
01. கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும், பதிவாளரும், வட மாகாணம்
02. வட மாகாணத்திலுள்ள சகல கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்களுக்கும்.